


அமரர்.

# குமாரசாமி. ஸ்ரீஸ்கந்தராஜா



அவர்களின் 31ம் நாள்

# நினைவு மலர்



# 31ம் நாள் நினைவு அஞ்சலி



## அமரர். குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா

தோற்றம்: 20.11.1959 மறைவு: 31.10.2023

### திதி நிர்ணய வெண்பா


"சோபகிருது வருஷ ஐப்பசி பதினான்கிலே
இருள்வளரும் அபரபட்ச திருதியை திதிதனில்
எம் குல விளக்காம் ஸ்ரீஸ்கந்தராஜா
பூவுலக வாழ்க்கை வேண்டாமென்றே
அவனருளாலே அவனடி சேர்ந்தார்"



**உ**

**சிவமயம்**





திருகோணமலையை பிறப்பிடமாகவும்,

வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர். குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா


(ஓய்வு பெற்ற நூலக உதவியாளர்)


**அவர்களின் நினைவாக**


**வெளியிடப்படும்**



# நினைவு மலர்







# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் தலைவராய்
அவனியில் நட்புடன் வாழ்ந்த
எங்கள் குலவிளக்கிற்கு
கண்ணீரும் கவலைகளும்
ஒன்றாக இணைந்த
நிலையில் தங்கள் ஆத்மா சாந்தி
அடைய கோணேசப் பெருமானை
வேண்டி இந்த அன்பு இதழை
காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

குடும்பத்தினர்

உ

சிவமயம்

# பஞ்ச புராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்(து) அடி போற்று கின்றேனே !!


நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்கு சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து, நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

உலகெலாம்உணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவியநீர்மலிவேணியன்,
அலகில்சோதியன்அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்



திருச்சிற்றம்பலம்

# வாழ்வுள அகவல்

அமரர் **குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா** அவர்கள் கிழக்கு மாகாணத்தில் கோணேசப்பெருமானின் புகழ்பூத்திருக்கும் திருகோணமலை மாவட்டத்திலே குமாரசாமி கமலேஸ்வரி தம்பதிகளுக்கு இளய மகனாக 20/11/1959ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்கு திருச்செல்வகுமார், தர்மராஜா(அமரர்) என்ற இரண்டு ஆண் சகோதர்களும் திருமலர், சத்தியேஸ்வரி, சுஜாதா ஆகிய மூன்று பெண் சகோதரிகளும் உளர்.

இளமைக் காலத்திலே பணிவும், பண்பும் பெற்றோருக்கடக்கமான பிள்ளையாகவும் இருந்தார். சகோதரர்களிடம் அன்பும் பணிவும் கொண்டவராக உறவினர்களிடமும் அவ்வாறாகவே நடந்து கொண்டார். சகோதரர்களுக்கு பக்கபலமாக இருந்து வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்து வந்தார். இளமைக் கல்வியை திருகோணமலை விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்திலும், கோணேஸ்வரா இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்றதன் பயனாக 20 வருடங்கள் அரச சேவையாளராக கடமையாற்றியுள்ளார்.

1985 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி சபையில் பன்குளம் பொது நூலகத்தில் நூலக உதவியாளராக இணைந்தார், அதன் பின்னர் 1989ஆம் ஆண்டிலிருந்து 2003ஆம் ஆண்டு வரை திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைக்குட்பட்ட சாம்பல்தீவு பொது நூலகம் மற்றும் வெள்ளைமணல் பொது நூலகம் என்பவற்றில் நூலக உதவியாளராக கடமையாற்றினார். 2003ஆம் ஆண்டு ஜூலை மாதம் தட்டெழுதாளராக கடமை பொறுப்பை ஏற்று 2005ஆம் ஆண்டு ஜூலை மாதம் குச்சவெளிபிரதேச சபையில் கடமையாற்றி அரச சேவையில் இருந்து விருப்பத்தின் அடிப்படையில் ஓய்வுபெற்றார்.

இவர் 1985 ஆம் ஆண்டு நவரெட்னம் தேவமலர் தம்பதிகளின் மூத்த புதல்வி வசந்தமலரை திருமணம் செய்தார். இல்லறம் நல்லறமானது அன்பும் அறனும் மிக்க இவரது இல் வாழ்க்கை இனிதே சிறக்க நற்பேறாம் மக்கட் பேற்றையும் பெற்று மகிழ்ந்தார். மூத்த புதல்வனுக்கு வினோதன் என்ற திரு நாமத்தையும் இளய புதல்விக்கு வதனமதி என்ற திரு நாமத்தையும் சூட்டி இருவருக்கும் நற்பண்பையும், நற் கல்வியுடன் சிறந்த ஒழுக்கத்தையும் ஊட்டி வளர்த்தார். சமூகத்தில் நற் பிரஜைகளாக வளர்த்த வகையில் இரண்டு பிள்ளைகளும் ஒழுக்கத்தில் சிறந்த அரச சேவையாளர் களாக இல்லறம் சிறக்க வாழ்ந்து வருகின்றனர்.

மரத்தில் இருந்து காய்ந்த இலைகள் சருகுகளாக உதிர்வது போல் யாருக்கும் பாரமில்லாமல் சாவு வரவேண்டும். பாரினில் வாழும் வரை பயனுள்ளவாறு வாழ வேண்டும். என்ற உயரிய சிந்தனைக்கு சொந்தக் காரரான அமரர் குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா இறுதிக் காலம் வரை அனைவரக்கும் பயனுடையவராகவும் யாருக்கும் பாரமில்லாமலும் வாழ்ந்து முடித்தார்.



# மனைவி மனதிலிருந்து....

அறிவுரை கூறும் அன்பானவரே..
ஆசையாக தேடி வரும் என் தெய்வமே..
இனிமையாக பழகும் இதய ஜீவனே..
ஈசன் அடி அடையவா சென்றீர்..

உயிரை விடவும் துணிந்து விட்டீர்
ஊர் தேடும் உம் சேவையை நிதம்
என் உயிரில் கலந்த மூச்சு
ஏன் இன்று இல்லாமல் போச்சு..?

ஐயம் பல இருந்தாலும் நம்பிக்கையில் இருந்தேன்
ஒன்றை நினைத்தால் உடனே வருவீர்
ஓயாமல் திரியும் உம் பொற்பாதம் ஓய்ந்ததுவோ..!
ஔடதங்கள் கூட பலனளிக்கவில்லையோ..!

–ஸ்ரீ. வசந்தமலர் (மனைவி)

## அண்ணனின் உள்ளக் குமுறல்...



எனக்கு தம்பியாய் பிறந்து
ஸ்ரீஸ்கந்தராஜா வாக வளர்ந்தாலும்
உண்மையில்
எனக்கும் எம் வீட்டிற்கும்
நீயே ராஜா
சின்ன ராஜா
எனக்கிருந்த படைபலம்
உனது பாசம் ஒன்றே
அண்ணா அண்ணா என –நீ
அழைக்கும் ஓசை
என்றும் ஓயாத பாச அலை
உன் மொழி
உன் மனதில் சிம்மாசனம் அமைத்து
அதில் என்னை ஏற்றி
வைத்தாயடா..!
இதுவரை ஒருநாளும் என்னை
“நீ”என்று
ஒருமையில் அழைக்கவில்லை
உனது குரல்
எனது காதுகளில் இன்றும்
“அண்ணா.... அண்ணா...” என்று ஒலிக்குதடா..!

உன் அன்பு அண்ணன்
கு.திருச்செல்வகுமார்

## மகன் உள்ளத்து உணர்வு...

கண் கண்ட என் அப்பா...!
காக்க நிதம் தாம்பட்ட துன்பம்
கிடைக்காது ஒருபோதும் தங்களைப்போல் நல்லுள்ளம்
கிதம் கேட்டால் ஓட கண்ணீர் வருகின்றது

குறையேதும் செய்திருந்தால் மன்னிக்க வேண்டும்
கூடியிருந்த காலம் கண் முன் தெரிகின்றது
கெட்டிக்காரன் என என் மகனை கொஞ்சி
கேட்டதெல்லாம் வாங்கித் தந்தீர்

கைக்குள் என்னை வைத்தது அரவணைத்த உம்மை
கொள்ளி வைக்கும் படி ஆக்கியதே என்செய்வேன்
கோடியில் ஒருவர் தானும் கிடைப்பாரோ உம்மைப்போல்
கௌரவமாய் எங்களை வாழ வழிகாட்டினீர்

**– வினோ (மகன்)**

## மகளின் வரிகள்...

மதிக்குட்டி என்றாய் மூன்றாம் வயதினிலே
அகவை முப்பதிலும் எதிர்பார்த்த வார்த்தையது...
அப்பா என்றால் அலாதிப் பிரியம்
காரணம் தெரியவில்லை அன்று
மழலைகளாய் நாம் இருவர் கண்டறியோம்
உன் கண்டிப்பு அத்தனை இன்பம்
என் பிள்ளைப் பருவத்தில்.

நான் பெற்ற அத்தனையும் இரட்டிப்பாய்
என் பிள்ளைகளுக்கும் கிட்டியது
உன் அளவில்லா அரவணைப்பு.
அன்று முதல் இன்று வரை
நிழலாய் எனைத் தொடர்ந்தாய்...

உன் அன்பும் பொறுமையும் சிறிதேனும் குறையவில்லை
எதிர்பார்ப்பேதும் கண்டதில்லை
ஒரு சுடு சொல்லும் கேட்டதில்லை
குறைசொல்லும் குணமோ சிறிதளவும் இல்லை
பேராசையும் எள்ளளவும் உணர்ந்ததில்லை உன்னிடம்.

குணம் கொண்ட மாந்தரென வாழ்த்தக் கண்டேன்
கண் பட்டதோ நானறியேன்
புண்பட்டதோ உன் இதயம்
உன் மௌனம் பலருக்கு விளங்கவில்லை.
தமிழ்த் தாகமோ...! ஆன்மிகத் தாகமோ...!
எமக்குப் புரியவில்லை.
எழில் **வதனமதி**ல் புன்முறுவலும் அழியவில்லை.
மனமிரங்கி நான் கேட்பது
உத்தமனார் வேண்டியது போல்
அல்லல்பட தரணியிலே
மீண்டொரு பிறப்பு வேண்டாமே...!

**–மதி (மகள்)**

# அன்புடன் மாமாவுக்கு...

அம்மாவுக்கு அண்ணனுமில்லை தம்பியுமில்லை
ஆனாலும் நீங்கள்தான் என் அன்பு மாமா...

வருவீர்கள் என்றெண்ணித்தானே
வழியனுப்பி வைத்தோம் நாமே
விழி மூடும் போதும்
வலியெல்லாம் மறந்து
புன்னகை பூத்ததோ
உங்கள் முகத்தில்...

அடிக்கடி அழைக்கும் குரல்
ஓடிவந்து உதவும் மனம்
சிறுபிள்ளையையும் மதிக்கும் குணம்
தனக்கென்று ஏதுமே கேட்காத ஆசை
ஆடம்பரமே இல்லாத வாழ்க்கை
சலிப்புக் காணாத பொறுமை
எல்லாம் காணாமல் போனதோ...?

கோபப்பட்டு கண்டதில்லை – ஒருபோதும்
குழந்தைகளை கொஞ்சாமல் கடந்ததில்லை – எப்போதும்
உதவியென்று யாரும் கேட்டால் மறுக்காது
கொண்டோடி திரிவீர்கள் பொறுப்போடு
சலிப்பென்றும் கண்டதில்லை முகத்தில்
சகிப்பென்றால் ஞாபகத்தில் உங்கள் முகமே.

அமைதியின் உருவம்
அடக்கத்தின் இருப்பிடம்
பண்பின் பெருந்தகை
பாசத்தின் உறைவிடம்
அன்பின் ஒளிவிளக்கு.

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கி சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்
என்றும் நினைவாக...!

– சிவா (மருமகன்)

# மருமகள் உள்ளத்திலிருந்து ...

தந்தையை இழந்த எனக்கு இனனொரு தந்தையானீர்
தாயைப்போல பரிவு காட்டினீர்
தினம் தினம் தேடி வருவீர்
தீராத கவலைகளை தீர்த்து வைத்தீர்

துன்பங்கள் வந்தபோதெல்லாம் உதவினீர்
தூய உள்ளம் படைத்த மாமனாரே
தெரிந்த நாள் முதல் அன்பைக் காட்டினீர்
தேடினாலும் உம்மைப் பொல் ஒருவர் இல்லை

தைரியத்தை இழந்த என் மனதில்
தொலையாது உங்கள் ஞாபகங்கள்
தோன்றும் போதெல்லாம் இனி என்ன செய்வேன்...?

– பிருந்தா (மருமகள்)

## அம்மப்பா எங்கள் நண்பன் ...

வரைந்து காட்டி கைகள்
வரையறையே இல்லாது ஓடிய கால்கள்
வளைந்து கொடுத்த தோள்கள்
வாழ்வில் தன்னையே அர்ப்பணித்து உருகிய உடல்...

அறுபதிலும் இருபதின் ஓட்டம்
வாலிபத்தின் அழைகயெல்லாம் அறுதியாக்கிய வதனம்
எல்லாம் காலத்தின் கோலத்தில்
கரைந்தொழிந்தனவோ...!

இருந்தும், திரிந்தும், புரண்டும்
எம்மோடு விளையாடியதெல்லாம்
என்றும் மறவாத நினைவுகள்...

பிறப்புக்களை ஏற்கும் மனம்
ஏனோ இறப்புக்களை ஏற்க மறுக்கிறது
கிறுக்கல்களின் மறைவில் காலமும் கடக்கிறது...

**– சி. கொற்றவன், சி. கவிஆரணி, சி. யதார்த்தன்**
**(பேரப்பிள்ளைகள்)**

## அப்பப்பா என்றாலே அன்பு...

சந்தோசம் வந்துவிடும் நீங்கள் வந்தால்
சாலையெல்லாம் கொண்டு திரிந்தீர்
சிரித்த புன்னகை போதும் நான் ஓடிவர
சீறி அழும்போது கண்ணீர் துடைத்தீர்

சுற்றிநான் வந்து நின்றபோதெல்லாம்
சூதானமாக ஆறுதல் கூறி சென்றிடுவீர்
செல்லுமிடமெல்லாம் பல கதை சொல்வீர்கள்
சேட்டைகள் பல செய்தாலும் பொறுத்துக் கொள்வீர்கள்

சைக்கிள் போதும் நாம் இருவர் சுற்றித்திரிய
சொல்லித்தர தங்களைப்போல் யார் உள்ளர்
சோதியோடு கலந்து விடடீரே
சௌகியமாக நான் வாழ உங்கள் ஆசி அது போதும்...

**– வி. பிரசித்தன் (பேரன்)**

## மாந்தருள் அப்பா...



குழந்தையும் தெய்வமும்
குணத்தால் ஒன்று என்றும்,
நம் உதவியை நாடும் மனிதரும்
நமக்கு தெய்வம் என்றும்,
சேவை செய்த உள்ளமிது...

அழகும் ஆடம்பமும் ஏன் என்பார்
அறிவு அதிகாரம் தரும் மமதையில்
மரியாதையை தவிர்த்து நின்றார்
எல்லாத் திறமைகளுமே அவருள்
ஆரவாரமின்றி அ டக்கமாக...

அவர் கொண்ட பொறுமைக்கு அளவே இல்லை
அதனாலோ என்னவோ சில
இடங்களில் ஏமாளியாகவும் பலரை
மகிழ்ச்சிப்படுத்தி இருக்கிறார்...

தெரிந்தது எதுவானாலும் வாழ்வில்
தெரிந்தது போல் எங்கும் காட்டியதில்லை
சிறு நன்மைக்கு பெயர் வாங்கியவரும் உள்ளார்
பெரு நன்மைக்கு பெயர் வாங்காதவரும் உள்ளார்
அந்த வரிசையில் நீங்களும்...

எல்லாம் சிவம் என்பார்..
பிரபஞ்சமே உண்மை என்பார்..
சைவம் வளர்க்க சில காலம்,
ஆன்மீகம் வளர்க்க சில காலம்,
இறைவன் வளர்த்ததென்னவோ
உங்களுக்குள் நோயை மட்டும்தான்...

–மதி (மகள்)

# அறிவியலும், ஆன்மிகமும்!...

அணுகுண்டுவீசிஅச்சமூட்டுவதும், Computer காட்டி கன்னத்தில் கைவைக்க செய்வதும், சோதனை குழந்தைகளை உருவாக்கி வியப்பூட்டுவதும் விஞ்ஞானம் அல்ல. மனிதனை மனிதனாக வாழ்விப்பதற்கு வகைசெய்யும் மதமும், மனிதனை பண்புள்ளவனாக வாழசெய்யும் தெய்வநம்பிக்கையும், மனிதனின் ஆன்மாவை ஆராய்ந்து பரமாத்மாவோடு ஐக்கியமடைய செய்யும் வழிபாடும், பக்தியும், தியானமும், யோகமும், யாகமும் விஞ்ஞானம்தான். சாதாரண விஞ்ஞானத்திற்கு மைக்ரோஸ்கோப், டெலஸ்கோப் பயன்படுத்துவது போல, மதவிஞ்ஞானத்திற்கு அன்பும், பண்பும் பயன்படுகின்றன.

விஞ்ஞானம் ஏன்? எப்படி? எதற்காக? என்று புற உலகை ஆராய்கிறது. மதம் ஏன்? எப்படி? எதற்காக? என்று மனிதனின் உள் உணர்வுகளை ஆராய்கிறது. விஞ்ஞானத்தில் ஏதோ ஒன்றை புதிதாககண்டு பிடிக்க போகிறோம் என்ற நம்பிக்கை ஊக்கு விசையாக பயன்படுகிறது. உலகம் எப்படி தோன்றியது என்ற கேள்விக்கு மட்டும்தான் விஞ்ஞானம் பதில்சொல்ல முடியும். ஆனால் மதமோ, உலகம் ‘‘எப்படி தோன்றியது’’ என்ற கேள்வியோடு, ‘‘ஏன் தோன்றியது?’’ என்ற கேள்விக்கும் பதில் கூறுகிறது. மரத்திலிருந்து அப்பிள் பழம் ஏன் பூமியை நோக்கி கீழே வந்தடைந்தது? என ஆராய்ந்த காரணத்தால் ஐசக்நியூட்டன், பூமிக்கு புவிஈர்ப்பு சக்தி உண்டு என கூறினார். மூடிய பாத்திரத்தில் கொதித்து கொண்டிருந்த நீர் அப்பாத்திரத்தின் மூடியை கழற்றி எறிந்து விட்டது. ஏன் என்று சிந்தித்ததால், நீராவி எந்திரத்தை ஜேம்ஸ் வாட்கண்டு பிடித்தார்.

இவ்வாறு புற உலகை ஆராய்ந்த காரணத்தால் பல உண்மை கண்டுபிடிக்கப்பட்டது. கடவுள் இருக்கின்றாரா? என்ற கேள்விக்கு தன்னைதானே உணர்ந்தவனுக்குதான் பதில் தெரியும், புரியும், விளங்கும். இதனை கிரேக்க பேரறிஞர் சாக்ரடீஸ், உன்னை நீ அறிந்து கொள்என்று கூறினார். மகாத்மாகாந்தி “உண்மை’’ தான் கடவுள் என்கிறார்.

நமக்கு உண்மை இரண்டு வழிகளில் கிடைக்கின்றன. ஒன்று தன்னை நோக்கி ஆராய்கின்ற அல்லது செய்கின்ற ஆய்வில் கிடைக்கும்

உண்மைகள். மற்றொன்று தன்னை சுற்றியுள்ள புறப்பகுதியை நோக்கி செய்கின்ற ஆய்வுகள். ஆகவே இந்த உண்மையை வணங்குவோம். அந்த மெய்ப்பொருளை உணர்வதற்கு முயல்வோம். பிறப்புக்கும், இறப்புக்கும் இடைப்பட்ட அந்தகாலத்தைதான் நாம் வாழ்நாள் என்கிறோம். அந்த வாழ்நாளில் ஒரு மனிதன் செய்யதக்கது எது? செய்யத்தகாதது எது? என்று மதம் எடுத்துரைக்கிறது. விவேகானந்தர் மதம் என்பது, பரம்பொருளை தெளிவாக உணர்வது, உணர்ந்த பின்னர் அந்தப்பரம் பொருளை போல் இருப்பது, பின்னர் அப்பரம்பொருளாக வேமாறுவது, என்கிறார்.

மனிதனின் மனதினை பக்குவப்படுத்தும் சாதனங்களில் பக்தி முக்கிய பங்கினை வகிக்கிறது. பக்தி என்பது மூடத்தன ஒரு செயல் அல்ல. அது விஞ்ஞான ரீதியான ஓர் உளவியல் இயக்கம். உயிரியல் தேவை. இதையாராலும் மறுக்க முடியாது. சிவம் சக்தியாக மாறும், சக்தி சிவமாக மாறும். இரண்டும் இணைந்தும் இருக்கும். பிரிந்தும் இருக்கும். பின் மீண்டும் இணைந்திருக்கும். இந்த அடிப்படை தத்துவத்தையே விஞ்ஞானம், பொருள், சக்தியாக மாறும் என்கிறது. ஐன்ஸ்டீன் என்ற அறிஞர் E=mc2 ல் என்ற சமனால் விளக்குகிறார். அணுசக்தியின் அடிப்படை சமன்பாடு இதுதான்.

ஆழ்நிலை தியானத்தின் மூலம் மனிதன் தன் மனதை உள்நோக்கி திருப்பி இறை சிந்தனையில் மூழ்கி இருக்கிறான். இதை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தால் தியானத்தின் போது மூளையில் அல்பா அலைகள் அதிகம் தோன்றுகின்றன. தியானத்தின் போது இரத்த அழுத்தம் குறைகிறது. இரத்தம் தூய்மை அடைகின்றது என்று ஜெர்மன்நாட்டு நரம்பியல் நிபுணர் ல்ட்ஸ் சோதனை வாயிலாக கண்டறிந்து உள்ளார். ஸ்ரீசக்ரம் என்னும் மகாயந்திரம் இந்து மதத்தில் சக்தி வழிபாட்டில் முக்கிய இடம் பெறுகிறது. இச்சக்கரம் பிளக்கப்பட்ட அணுவின் அமைப்பினை உடையது. அணுக்கருவில் நடுவில் உட்கரு இருப்பது போன்று ஸ்ரீசக்கரத்திலும், பிந்துமண்டலம் எனும்சக்தி“ நடுவிலுள்ளது. மாஸ்கோபல்கலை நிபுணர் அலெக்ஸிகுலைசாவ், என்பவர்கும் ப்யூட்டர் உதவியுடன் ஆராய்ந்து ஸ்ரீசக்ரத்தின் கணித நுட்பங்களை வெளியிட்டுள்ளார். நமது பூமி எவ்வாறு உருவாயிற்று என்பதை பற்றிய ஆராய்ச்சியின் முடிவுகள் இச்சக்கரத்தின் கேட்பாடுகளாக உள்ளன. மேலும் மனிஇயலையும் ஒத்துள்ளது. இந்த சக்கரத்தை வரைய மிகநுட்பமான கருவிகளாக Computer

தேவைப்பட்டன. இதை இந்து சமய முன்னோர்கள் எவ்வாறு வரைந்தனர் என்பது இன்னும் வியப்பிற்குரிய விடயமாக இருக்கிறது.

கோயில்களில் மூலவிக்ரகம் அமைந்துள்ள கருவறை, ஒலி அலைகள் அதிர்வடையும்படி அமைந்துள்ளது. மூலவிக்கிரகத்திற்கு செய்யப்படும் அபிடேக ஆராதனைகள், மந்திர உச்சரிப்புகள் விக்ரகத்தில் பட்டு அதிர்வடைகின்றன. இது பக்தர்களின் உடல், உள்ளத்தில் அமைதியை தருகிறது. அபிடேகத்தின் போது எதிர்மின்னோட்டமுடைய காற்றும், ஈரப்பதமுள்ள காற்றும் வெளிவருகின்றன. இது இன்றைய விஞ்ஞானம் கூறும் உயிர்வாழ தேவைப்படும் மின்னலைகளாகும். துளசி, மாவிலை, வேப்பிலை போன்றவைகளிலும் அதிகமின்னூட்டம் காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றது. துளசி தீர்த்தம் பலவித நோய்களை கட்டுப்படுத்துகிறது. மாவிலை தோரணம் காற்றில் உள்ள கிருமிகளை ஒழிக்கின்றது. நீரினை தூய்மைபடுத்துகின்றது. மாமரம் போன்றவை வாயுமண்டலத்தை தூய்மைபடுத்துகின்றது. மேகங்கள் சுமக்கும் நீரை மழையாக பெய்யவும் இவைகள் உதவுகின்றன. வேப்பிலை நோய்களை கட்டுப்படுத்துகிறது.

ஓசோன் காற்று மார்கழி காலையில்தான் அதிகம் கிடைக்கிறது. சீன அக்குபஞ்சர் மருத்துவம் அதிகாலை நேரத்தில்தான் நோய்களை குணப்படுத்த பயன்படுகிறது. அறிவியலின் அணுசக்தியும், மதத்தின் ஓம்சக்தியும் ஒரே பரம்பொருளின் வெவ்வேறு தோற்றங்கள்தான். அறிவியல் வேறு, மதம் வேறு அல்ல. அறிவியலுக்கும், மதத்திற்கும் இடையே உண்மையான பிரிவு ஏதும் கிடையாது. பௌதிக உலகில் அறிவியல் விதி என்றால், ஆன்மிக உலகில் ஆன்மிக விதி என்கிறோம்.

- அமரர் குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா

மண்ணில்
20
11
1959



விண்ணில்
31
10
2023

**அமரர். குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா**
(ஓய்வு பெற்ற நூலக உதவியாளர்)

நித்தம் இனியெங்கள் முற்றம் தவிக்கும் – உங்கள்
பொற்பாதம் காணாமல்
துக்கம் தாளாமல் காற்று தவிக்கும்– உங்கள்
மூச்சு தன்னில் சேராமல்!
எத்தனை நாளோ எத்தனை நாளும்
எம்மிடம் வராமல் நீங்கள் இருந்ததில்லை
சித்திரை வெயிலோ மார்கழி மழையோ
எமை பாராமல் நீங்கள் கடந்ததில்லை
சித்தம் போக்கு சிவன் போக்கு என – சிவன்
எடுத்துவிட்டான் உம்மை தன்னிடத்தில்!
நித்தம் கலங்கி தவிப்போம் நாங்கள்
இனி யாரை வைப்போம் மாமா உன்னிடத்தில்?

**உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்**

R.N. PRATHEEPAN
Top English college
No 32,Sivan Street,
Trincomalee.

Navaratnaraja Srikanth
London


# நன்றி நவிலல்

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் ஒளி விளக்காய் அறத்தின் வழி நின்று எங்கள் வாழ்வில் வழி காட்டியாய் திகழ்ந்து நெஞ்சில் நீங்காத நினைவுகளை தந்து ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் குடும்பத் தலைவர் அமரர்.குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் இறைபதம் எய்தியதை அறிந்து உடனுக்குடன் தங்களால் முடிந்த உதவிகளை செய்தவர்களுக்கும், அனுதாபங்களை தெரிவிக்க எமது இல்லத்திற்கு நேரில் வருகை தந்தவர்களுக்கும், நாங்கள் துயரில் இருக்கையில் ஆறுதல் கூறியோருக்கும், தமது சிரமத்தையும் பாராது உணவுகளை தந்து உதவியவர்களுக்கும் சமூக வலைத்தளங்கள், மின்னஞ்சல், தொலைபேசி என்பவற்றின் மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், எங்கள் ஆழ்ந்த துயர நேரத்தில் எமது வேலைகளில் பங்கு கொண்டு பெரும் உதவி புரிந்தோருக்கும், இறுதிக் கிரியை, தகன கிரியை ஆகியவற்றுக்கு வருகை தந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் அயலவர், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙணம் குடும்பத்தார்.

# வம்சாவழி


கந்தையா * + முத்தம்மா*
விஸ்வலிங்கம் * + அன்னமுத்து*
குமாரசாமி * + கமலேஸ்வரி *
நவரெட்னம் * + தேவராணி
திருச்செல்வகுமார் + ரோஸ்மேரி*
திருமலர் + கோணேசமுருகையா
சத்தியேஸ்வரி + நவரத்தினராஜா
தர்மராஜா* + அன்னலட்சுமி
ஸ்ரீஸ்கந்தராஜா*
சுஜாதா + பாலேந்திரராஜா
வசந்தமலர்
வினோதன் + பிருந்தா
பிரசித்தன்
வதனமதி + சிவகுமார்
கொற்றவன்
கவிஆராணி
யதார்த்தன்

(* - அமரர் )

காலமென்றே ஒரு நினைவும்
காட்சியென்றே பல நினைவும்
கோலமும் பொய்களோ
அங்குக் குணங்களும் பொய்களோ
காண்பதெல்லாம் மறையுமென்றால்
மறைந்ததெல்லாம் காண்பமன்றோ
நானும் ஓர் கனவோ
இந்த ஞாலமும் பொய்தானோ





